உ

கடவுள் துணை.

---

# ஸ்ரீரங்கநாதர் சிந்து.

—:*:—

இஃது சிதம்பரம்,

**நடராஜசுவாமிகளால்**

பார்வையிடப்பட்டு

---

சென்னை-இட்டா,

**பார்த்தசாரதிநாயுடு அவர்களால்**

சக்கரவர்த்தி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

1915.

சிவமயம்.

# ஸ்ரீ ரங்கநாதர் சிந்து.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அண்டர்முனிவோர்கள் துதி ஸ்ரீரங்கநாதா-ஓ
அண்டினேனென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
அண்டினேனென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா

சண்டனுக்கஞ்சாமலுய்ய ஸ்ரீரங்கநாதா-ஓ
சாயுஜ்யந்தந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
சாயுஜ்யந்தந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா உ

செந்திருவளரும் ஸ்ரீரங்கநாதா-ஓ
சிந்தைநோய்தீர்த்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
சிந்தைநோய்தீர்த்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா௩

வஞ்சகப்பிரபஞ்சமீது ஸ்ரீரங்கநாதா-ஓ
மயங்காமலென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
மயங்காமலென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா ௪

ஆனையிடர்தீர்த்தவனே ஸ்ரீரங்கநாதா
அரவிற்பணிந்தவனே ஸ்ரீரங்கநாதா-ஓ
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
அரவிற்பணிந்தவனே ஸ்ரீரங்கநாதா ௫

அன்பர்துதிக்கிரங்கும் ஸ்ரீரங்கநாதா-ஓ
அஞ்சலுடன்வந்தாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
அஞ்சலுடன்வந்தாள்வாய் ஸ்ரீரங்கநாதா ௬

ஜோதிசொரூபமான ஸ்ரீரங்கநாதா-ஓ
சுகமதுதந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சுகமதுதந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா ௭

ஆதியந்தங்கடந்த ஸ்ரீரங்கநாதா-ஓ
அன்புகூர்ந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
அன்புகூர்ந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா ௮

வேண்டியவரமளிக்கும் ஸ்ரீரங்கநாதா-ஓ
மேன்மைதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
மேன்மைதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா ௯

தஞ்சமென்றோரைக்காக்கும் ஸ்ரீரங்கநாதா-ஓ
சௌபாக்யந்தந்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சௌபாக்யந்தந்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா ௰

தீனதயாநிதியே ஸ்ரீரங்கநாதா-ஓ
சித்திதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சித்திதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா ௧௧

என்முகம்பார்த்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா-ஓ
என்றுமடிமைநானே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
என்றுமடிமைநான் ஸ்ரீரங்கநாதா ௧௨

மாதுதுயில்வளர்த்தி ஸ்ரீரங்கநாதா-ஓ
மானத்தைக்காத்தவனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
மானத்தைக்காத்தவனே ஸ்ரீரங்கநாதா ௧௩

பாண்டவர்கள் தூதுவனே ஸ்ரீரங்கநாதா-ஓ
பார்த்தனுக்காருமையா ஸ்ரீரங்கநாதா
பாலனெனக்கார்துணை ஸ்ரீரங்கநாதா
பட்சம்வைத்துக்காருமையா ஸ்ரீரங்கநாதா க௪

ஆண்டாளடிபணிந்து ஸ்ரீரங்கநாதா-ஓ
ஆனந்தசிந்துசொன்னேன் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
ஆனந்தசிந்துசொன்னேன் ஸ்ரீரங்கநாதா க௫

நம்மாழ்வாரடிபணிந்தேன் ஸ்ரீரங்கநாதா-ஓ
நாடிவந்தேனுன்னைநம்பி ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
நாடிவந்தேனுன்னைநம்பி ஸ்ரீரங்கநாதா க௬

கம்சன்தன்னையழித்த ஸ்ரீரங்கநாதா-ஓ
கார்க்கக்கடனுனக்கே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
கார்க்கக்கடனுனக்கே ஸ்ரீரங்கநாதா க௭

அன்றுவிபீஷணற்கு ஸ்ரீரங்கநாதா
அபையாஸ்தம்தந்தவனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
அபையாஸ்தம்தந்தவனே ஸ்ரீரங்கநாதா க௮

காளிங்கர்த்தனனே ஸ்ரீரங்கநாதா-ஓ
கருணைவைத்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
கருணைவைத்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா ௧௯

ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஸ்ரீரங்கநாதா-ஓ
ஆதிநாராயணனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
ஆதிநாராயணனே ஸ்ரீரங்கநாதா ௨௰

சங்குசக்ராதரனே ஸ்ரீரங்கநாதா-ஓ
ஜானகிமனோகரனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
ஜானகிமனோகரனே ஸ்ரீரங்கநாதா ௨௧

இரணியனைசம்மரித்த ஸ்ரீரங்கநாதா-ஓ
ஏழைகளைக்காப்பவர்யார் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
ஏழைகளைக்காப்பவர்யார் ஸ்ரீரங்கநாதா ௨௨

இரவும்பகல்துதித்தேன் ஸ்ரீரங்கநாதா-ஓ
இரங்கிஅருள்தருவாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைகளைக்கண்ணாலேநீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
இரங்கிஅருள்தருவாய் ஸ்ரீரங்கநாதா ௨௩

## அற்புதக்கும்மி.

கொம்மியடிப்பெண்கள்-கும்மியடிநீங்கள்
குனிந்துனிமிர்ந்து கும்மியடி.

செம்மையாகரங்கனுதனைக்கண்டுமே
சேவித்துகும்மியடியுங்கடி-ரங்கனை
பாவித்துகும்மியடியுங்கடி.

சர்ப்பசயனத்தை யுடையவரே-அன்று
தர்மர்க்கு அபயஸ்தம்கொடுத்தவரே
கர்ப்புள்ள துரோபதையைக் காக்கும்பொருட்டாக
கணக்கில்லாசேலையைத் தந்தவரே கும்மி

ராவணசம்மாரஞ்செய்தவரே-அன்று
லட்சுமிசிறையை மீட்டவரே
பாதகனாகிய யிரணியனையன்று
பட்சமாய்ரெண்டாய் கிழித்தவரே கும்மி

தேவர்குறைகளை தீர்த்தவரே-மலையால்
கோபிகாஸ்திரீகளை கார்த்தவரே
பூதகிபாலைகுடித்தவரே-அவளை
போகவுயிரைமடித்தவரே கும்மி

அபயமபயமென் றோதும்யானைக்கன்று
அற்புதக்காட்சியைத் தந்தவரே

அதமாய்கொக்குவாய் ரெண்டாய்பிளந்திட்டு
விஷமுள்ளகம்சனை கொன்றவனே கும்மி

ஆலிலைமேல்பள்ளி கொண்டவரே-அன்று
அன்பர்க்கருள் தந்தளித்தவரே
சோதியால்தவழ்ந்து நடந்தவரே-பாம்பை
சூட்சமாய்ரெண்டாய் கிழித்தவரே கும்மி

துளசிமாலையை அணிந்தவரே-அன்று
துரியனுக்குதூது சென்றவரே
நீதமாய்லூடி மண்கேட்டரக்கனை
நிலத்திலழுத்தியே கொன்றவரே கும்மி

கூர்மஅவதாரம்கொண்டவரே-வெண்ணை
கூசாமல்வாரியே யுண்டவரே
சாதகமான விபூஷணர்க்கன்றுனீர்
சாயுச்சியபதவி தந்தவரே கும்மி

சாரைக்கீரைகொய்ய வந்தவரே-நல்ல
காட்டில்மனம்வந்து நின்றவரே
பாலர்களாகிய பக்தர்களைக்-கடைக்
கண்ணால்கண்டினி களிக்காயோ கும்மி

ஸ்ரீரங்கநாதர்சிந்து.

முற்றிற்று.